(ஆ) ஆம் எனில், எப்போது பதவி உயர்வு அளிக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : கன்னியாகுமரி மாவட்டம் அரசு ரப்பர் கழகத்தில் 20 ஆண்டுகளாக பணியாற்றிவரும் பால்வெட்டும் தொழிலாளர்களில் 100 பேருக்கு ஒருவர் என்ற வீதத்தில் மேற்பார்வையாளர் (Supervisor) பதவி உயர்வு கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு ஏதும் இல்லை.

டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் அரசு ரப்பர் கழகத்தில் 20 ஆண்டுகளாக 'டேப்பர்' வேலை பார்த்து வருகிறார்கள். இவர்களுக்கு சூப்பர்வைசர்களாகப் பதவி உயர்வு கொடுக்காவிட்டாலும் 'டேப்பர்' கிரேடு 1, 2,3, என்று சீனியாரிட்டி முறையில் பல்வேறு பதவி உயர்வு கொடுக்க அரசு முன்வருமா என்றும், அவர்களுக்கு ஊக்க ஊதியம் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருப்பது சூப்பர்வைசர்களாக அவர்களுக்குப் பதவி உயர்வு தரப்படுமா என்பதுதான். அங்கே சூப்பர்வைசர்களாகப் பணியாற்றுகின்றவர்கள், சரகர்கள் மற்றும் வனக் காவலர்கள் தான் அதைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். 100 பேருக்கு ஒருவராகப் பார்வையிட்டு ஏறத்தாழ அந்தப் பணியிலே உள்ளவர்கள் 42 பேர்கள் இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருப்பதைப் போல இது போன்ற குறிப்புகள் அரசின் கவனத்திற்கு வரவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 578. திரு. ம. சின்னசாமி. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

578—

போக்குவரத்துக் கழகங்களின் சார்பில் ரப்பர் தொழிற்சாலை.

*5270— திரு. ம. சின்னசாமி :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

1992 ஏப்ரல் 21]

போக்குவரத்துக் கழகங்களின் சார்பில் ரப்பர் தொழிற்சாலை அமைக்கும் செயற் குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக அரசு ஏராளமான போக்குவரத்துக் கழகங்களை வைத்திருக்கிறது. ஆகவே போக்குவரத்துக் கழகங்களின் சார்பில் தனியாக ஒரு ரப்பர் தொழிற்சாலையை ஆரம்பித்தால் போக்குவரத்துக் கழகங்களினுடைய சுயதேவையைப் பூர்த்தி செய்வதற்கு அது ஏதுவாக இருக்கும். ஆகவே, எதிர்காலத்தில் அரசு இது குறித்து பரிசீலிக்குமா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரப்பர் பாலிலிருந்து ரப்பர் தயாரிப்பதற்கு பல்வேறு தொழில்சாலைகள் இன்றைக்கு இருக்கின்றன. அதேபோல, குறைந்த அளவிலே நம்முடைய போக்குவரத்துக் கழகங்களுக்கு வாங்கிக் கொண்டிருக்கிறோம். பல்வேறு தொழிற்சாலைகள் நடத்துகின்றபோது, அதிலே சரியான முறையிலே அந்த ரப்பர் பாலை வடித்து, அதைச் சரியான முறையிலே தயாரிக்க முடியவில்லை என்றால், அந்த ரப்பரைக் கொண்டு தயாரிக்கப்படுகின்ற டயர்களைக் கொண்டு ஓட்டுகின்ற நேரத்தில் பல்வேறு தவறுகள் ஏற்படும் என்ற காரணத்தால் இப்போது ஒவ்வொரு பகுதிக்கும் ஒவ்வொரு துறையிலிருந்தும் ரப்பரை நாம் வாங்கிக் கொண்டிருக்கிறோம். டன்லப் டயர் ஒருபுறம். இதேபோன்று பல்வேறு டயர்களை அந்த அந்தப் பகுதிக்கு ஏற்றவாறு, அந்த அந்தப் பாதைகளுக்கு ஏற்றவாறு நாம் வாங்கிக் கொண்டிருக்கிறோம். ஆகவே, ஒரு குறிப்பிட்ட ரப்பரைத் தயாரித்து, தமிழகப் போக்குவரத்துக் கழகங்களில் பயன்படுத்துவது என்பது சுலபமான காரியம் அல்ல. ஆகவே தான் அதை அரசு ஏற்க இயலவில்லை என்று குறிப்பிட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் தொழிற்சாலையைத் துவக்குவதற்காக ஏற்கெனவே மாண்புமிகு

[1992 ஏப்ரல் 21

முதல்வர் அவர்கள் 400 கோடி ரூபாயை லோனாகக் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். ஏற்கெனவே கிடைக்கிற ரப்பரே போதுமானது. அதுவும் உங்கள் இலாகாவில் தான் இருக்கிறது. அரசு ரப்பர் கழகத்திற்குக் கிடைக்கின்ற ரப்பரும் தனியார்கள் உற்பத்தி செய்கின்ற ரப்பரும் சேர்ந்தால் ரப்பர் தொழிற்சாலைக்கு அதிகமான ரப்பர் கிடைக்கும். அதை வைத்துக்கொண்டு நம்முடைய போக்குவரத்துக் கழகமே ஒரு தொழிற்சாலையை கன்னியாகுமரி பகுதியிலே உருவாக்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரியிலே இருக்கிற ரப்பர் தொழிற்சாலை இன்றைக்கு நஷ்டத்திலே இயங்கிக் கொண்டிருப்பதை உறுப்பினர் அவர்கள் நன்கு அறிவார்கள். ஆண்டு ஒன்றுக்கு 2½ கோடியிலிருந்து 3 கோடி வரை நஷ்டம் ஏற்படுகின்ற சூழ்நிலை உங்களுக்கு நன்றாகத் தெரியும். அரசு ஒரு நிலையை எடுக்கிறபோது, அதை ஆய்வு செய்து அதில் லாபம் ஈட்ட முடியுமா? அதனால் அந்தப் போக்குவரத்துத் துறைக்கு லாபம் வருகிறதா என்று ஆய்ந்து கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருப்பதை அரசு கவனத்தில் கொள்ளும். அது சரியான முறையிலே இயங்க முடியும் என்று அரசு கருதினால் அந்தக் கருத்தை ஏற்றுக் கொள்வதற்கு அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தமிழகத்தில் உள்ள சாலைகளில், தார் சாலைகளில் மேடு பள்ளங்கள் இருக்கின்ற காரணத்தினால் போக்குவரத்துக் கழகங்களில் ஓடக்கூடிய வண்டிகளில் டயர்கள் எல்லாம் இன்று அடிபடுகின்றன. ஆகவே, வெளிநாடுகளில் இருப்பதைப்போல ரப்பர் ரோடு போடுவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ரப்பர் ரோடு கேட்கிறார். சுதந்திரம் பெற்றதற்குப் பிறகு சாலை வசதிகளே இல்லாமல் பல்வேறு இடங்களில் இருக்கின்றன. நம்முடைய தமிழகத்தின்

1992 ஏப்ரல் 21]

முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகுதான் யாருமே எண்ணிப்பார்க்காத அளவுக்கு நெடுஞ்சாலைத் துறையில் இன்றைக்கு ஏறத்தாழ 200கோடி ரூபாய்க்கு மேலே பல்வேறு திட்டங்களை உருவாக்க வேண்டுமென்று தமிழகத்தில் ஒரு வரலாற்றைப் படைத்துக் கொண்டிருக்கிற முதலமைச்சராக இருந்து கொண்டிருக்கிற காரணத்தால், நீங்கள் குறிப்பிடுவதைப் போல ரப்பர் ரோடு போடுகின்ற அளவுக்கு இந்திய நாட்டிலே வருமானம் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் புரிந்து கொள்வார்கள் என்று நான் கருதுகின்றேன.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 579. திரு. வ. மு. சுப்பிரமணியம், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

579—

மானாமதுரை தொகுதியில் வைகையாற்றில் தடுப்புச் சுவர் கட்டுதல்.

*1459— திரு. வ. மு. சுப்பிரமணியம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மானாமதுரை தொகுதியில் வைகை ஆற்றிலிருந்து பிரிந்து செல்லும் பழையனூர், மாரநாடு, கீழ்ப்பசலை ஆகிய கால்வாய்கள் மேடாக இருப்பதால், வைகை ஆற்றில் தடுப்புச் சுவர் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ், கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) வைகைக் கால்வாய்களின் முகப்புகளில் தலை மதகுகள் கட்டி தண்ணீர் கால்வாய்களில் செல்லத்தக்க வகையில் தடுப்புச் சுவர்கள் கட்டுவதற்கும், கால்வாய்களைச் சீரமைப்பதற்கும் ஏறத்தாழ 50½ இலட்சம் ரூபாய் இன்றைக்கு அனுமதிக்கப்பட்டு இருக்கிறது. 1992-93 ஆம் ஆண்டு பகுதித் திட்டத்தின் கீழ் அதாவது 'பார்ட் ஸ்கீம்' என்று சொல்லப்படும் அந்தத்